1975 நவம்பர் 5]

உப்பிடமங்கலம்—பஞ்சப்பட்டி சாலை

* 189 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிடமங்கலத்திலிருந்து முனையனூர், சேங்கல் வழியாக பஞ்சப்பட்டி வரை செல்லும் சாலை பெருவழித்துறையின் கண்காணிப்பில் கொண்டுவரப் பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், மேற்படி சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) 16,8 கி,மி, நீளமுள்ள உப்பிடமங்கலம்—பஞ்சப்பட்டி சாலை கீழ்க்கண்டுள்ளவாறு நான்கு பிரிவுகளைக்கொண்டது :

1. உப்பிடமங்கலம்—மதுக்கரைச்சாலை கி.மீ. 0.00—7.20.

2. முனையனூர்—மதுக்கரைச்சசாலை கி.மீ. 0.00—2.80.

3. மாயனூர்—செங்கால்பட்டி பஞ்சப்பட்டி சாலை கி.மீ. 7.60—16.40.

4. மைலம்பட்டி—பஞ்சப்பட்டி சாலை கி.மீ. 13.6—16.8.

வரிசை 3, மற்றும் 4-ல் உள்ள சாலைப்பகுதிகள் பெருவழித்துறையின் இதர மாவட்டச் சாலைகளின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மற்ற சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பெருவழித்துறை தற்போது பராமரித்துவரும் இந்தச் சாலைகள் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. இதை தார்ச்சாலையாக மாற்றியமைக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இவை இதரச் சாலைகளின் கீழ்தான் பராமரிக்கப்படுகின்றன. தார்ச்சாலையாக மாற்ற நிதிநிலை சரியாக இல்லை. நிதிநிலை சரியான பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

[1975 நவம்பர் 5

திரு. கு. காமாட்சி: பொதுவாக எவ்வளவு தொலைவு சாலைகள் பெருவழித்துறையின் கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்போது நிதிப்பற்றுக் குறை காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பஞ்சப்பட்டியில் இருந்து மைலம்பட்டி செல்லும் சாலை 16 ஆண்டுகளுக்கு முன்பு செப்பனிடப்பட்டது. அதற்குப் பிறகு செப்பனிடும் பணி நடைபெறவில்லை. இனிமேலாவது செப்பனிட அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காரணம், நிதிப் பற்றுக் குறை ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

மயிலம்—நல்லாவூர் சாலையில் பாலம்

* 190 வினா—**திரு. ந. முத்துவேல்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் மயிலம்—நல்லாவூர் சாலையில் தென் கோடிப்பாக்கம் ஏரியின் குறுக்கே உள்ள கலிங்கலுக்குப் பதிலாக பாலம் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: இந்த தென்கோடிப்பாக்கம் என்னுடைய துறைப்பாக்கம் தொகுதிக்கு நெருக்கத்தில் உள்ளது. இங்கே செய்யப்படுகிற பணியினால் என் தொகுதிக்கும் நன்மைகள் உண்டு என்ற காரணத்தினால் அரசு உடனடியாக இதில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, திரு. பாலசுந்தரம் தொகுதி என்பதற்காக தனிச் சலுகை காட்ட இயலாது.